# சுங்க மேலதிக நேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க மேலதிக நேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) BOV – CTV – ஒருகொடவத்த எனும் பெயரில் 2002 ஆம் 2004 ஆம் ஆண்டுகளிற்கு உரித்தான முறையே ரூபா 611,156 மற்றும் ரூபா 534,773 தொகையான கடன்பட்டோர் மீதி அந்நிறுவகங்களுக்குரிய நீர்ப்பட்டியல்களுக்காக ஈடுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குத் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே 2005 ஆம் ஆண்டிற்காக அந்நிறுவகத்திலிருந்து பெறவேண்டிய ரூபா 1,097,245 தொகையான மீதி 2008 ஆண்டின் போது முறையான விசாரணை மற்றும் அங்கீகாரம் இன்றி திரண்ட நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகையில் திரட்டு நிதியத்தினால் செய்யப்பட வேண்டிய ரூபா 708,656 தொகையான நீர் மற்றும் மின்சாரப் பட்டியல் செலவினங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இத்தவறு 2010 ஆம் ஆண்டிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 7,017,198 மற்றும் ரூபா 1,730,375 தொகையான முறையே 08 நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வு அறிக்கைகளினூடாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்காக அடுத்த ஆண்டில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தார். எனினும் 2011 ஆம் ஆண்டிலும் அதனை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 40,839,267 தொகையான பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட கூட்டுத்தொகை ரூபா 16,960,226 பெறுமதியான 07 கடன்பட்டோர் மீதிகள் நிலவியதுடன் இது மொத்த நிலுவை மீதியில் 41.53% ஆகும். எவ்வாறாயினும் 2012 யூன் 30 வரையில் இக் கடன்பட்டோர் நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,663,201 ஆக இருந்தது.

(ஆ) மொத்த கடன்பட்டோர்களில் ரூபா 12,460,515 அதாவது 30.51% ஆனது 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்ததுடன் இதில் ரூபா 6,459,537 அதாவது 51.84% ஆனது 20 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்பட்டது. அறவீடுகள் நிச்சயமற்ற நிலையில் இருந்த அம்மீதிகளுக்காக போதிய அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 7 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து காணப்படுகின்ற கடன்பட்டோரிடமிருந்து குறித்த தொகையை அறவிடுவதற்காக நடப்பாண்டிலும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன்பட்டோராகக் காட்டப்பட்டிருந்த சில நிறுவனங்களின் உள்ளமை தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட்டமையும் அவதானிக்கப்படவில்லை.

(இ) சில கடன்பட்டோர் மீதிகளுக்குரிய பிணை வைப்புக்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 விசேட வைப்புக்களும் முதலீடும்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த ரூபா 10,063,434 தொகையான வைப்புக் கணக்கு மீதி 75 நிறுவனங்களிலிருந்து வைப்பாகப் பெறப்பட்ட பணம் மற்றும் அவற்றிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி வருமானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இவ் வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இடையூறாக இருந்த நோக்கங்கள் தொடர்பாக எழுத்து மூலத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைப்புக்கள் பெறப்பட்ட நிறுவனங்களின் உளமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கான செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிராததுடன் அவ் வைப்புக்கள் மீளச் செலுத்தப்பட வேண்டியவையா என்பதும் உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) 1967 தொடக்கம் பெறப்பட்ட வைப்புப் பணம் சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பெறப்பட்டிருந்த வட்டி ரூபா 10,604,999 ஆக இருந்தது. இவ் வட்டி மற்றும் வைப்புக்களின் கூட்டுத்தொகையான ரூபா 10,063,434 தொகை முதலீடாகவும், விசேட வைப்பு பொறுப்பாக ஐந்தொகையிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பல வருட காலமாக இப்பணம் சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மிகவும் குறைவான வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் உரிய பணம் ஏனைய பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்படவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்கள் அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் இன்மையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிசெய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | சில்லறைக் கடன்பட்டோர் | 40,839,267 | 178 நிறுவகங்களில் நிலுவையாகக் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளுக்கு உரித்தான மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | 08 கணக்கு விடயங்கள் | 8,747,573 | உறுதிப்படுத்தலுக்கான ஆவணங்கள் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2001 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய 15/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இலங்கை சுங்க உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை பதிவு செய்வதற்காக நேரப்பதிவு இயந்திரமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் நேரப்பதிவு இயந்திரத்தை பயன்படுத்துவதற்குப் பதிலாக ஒவ்வொரு கிளையிலும் பதிவேடொன்றைப் பேணி அதனூடாக வருகை மற்றும் வெளிச்செல்லல் என்பன அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) நி.பி 175(2) இன் பிரகாரம் நிலுவைத் தொகையை சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டுமென எடுத்துக்கூறப்பட்டுள்ளதுடன், தாமதமின்றி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆயினும் ரூபா 40,839,267 ஆன நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை சுங்கத்தின் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் நாளொன்றிற்கு 12 முதல் 27 மணித்தியாலங்கள் வரையான காலப்பகுதிக்காக மாதமொன்றிற்கு 600 மணித்தியாலங்களை மிகைத்து மேலதிக கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறும் வகையில் முறையற்ற விதத்தில் உள்ளகப் பிரமாணங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காகப் பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை. இம்மேலதிக நேர யோசனைத் திட்டம் அரசின் பொதுப் பிரமாணங்களின் ஊடாக கட்டுப்படுத்தப்படும் செயற்பாடாக அல்லாதிருந்தது. அவ்வாறே இவ்வறிக்கையின் 2.2.7(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உத்தியோகத்தர்களில் பெரும்பாலோர் நேரக்குறிப்புப் பத்திரங்களை உபயோகிக்காமையால் இம் மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் சரியான தன்மை தொடர்பாக கேள்விக்குரியதாக இருந்தது.

### 1.2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் யூன் மாதத்தின் போது ஏற்றுமதிப் பிரிவிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களில் 10 பேர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது அவ்வுத்தியோகத்தருக்கு மாதமொன்றிற்கு 650 மணித்தியாலங்கள் வரை மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு மேலதிகநேரக் கொடுப்பனவு செலுத்தப்படும் காலத்தின் போதே ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வெளிக்கொள்கலன் களஞ்சிய ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டு அவ் உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 18,000 முதல் ரூபா 68,700 வரையான வீச்சில் வெளிக்கொள்கலன் களஞ்சிய பரிசோதனைக் கட்டணக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) ஏற்றுமதி, பிணைமுறிகள் மற்றும் பிரயாணப் பொதிகள் போன்ற பிரிவுகளில் முறையே 2011 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2012

ஆகஸ்ட் வரை உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளில் இத் தகவல்கள் கணனியில் இருந்து அழிந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இக்கொடுப்பனவின் சரியான தன்மையை உறுதிப்படுத்த போதியளவான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் ரூபா 341,098,003 தொகையான கப்பல் சரக்குகள் பரிசோதனைக் கொடுப்பனவுகளின் சரியான தன்மையை மீளாய்வாண்டின் போதும் பரிசோதனைக்கு உள்ளாக்க முடியாதிருந்தது.

(இ) மேற்கூறப்பட்டதன் பிரகாரம் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளம், ஊக்குவிப்புக் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் வெகுமதித் தொகை என்பவற்றிற்கு மேலதிகமாகவே படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அநேகமான உத்தியோகத்தர்களின் மேலதிக நேர உழைப்பு மாதாந்த திரட்டிய சம்பளத்திற்கு மேற்பட்டே காணப்பட்டது. நிலவும் பிரமாணங்களின் பிரகாரம், முழு வருடத்திலும் உத்தியோகத்தர்கள் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தினால் ஒவ்வொரு உத்தியோகத்தரும் சேவையில் ஈடுபடக்கூடிய ஆகக்கூடிய மேலதிக நேர மணித்தியால அளவு ரூபா 6,900 ஆகும். உத்தியோகத்தர்களின் இவ்வாறு ஆகக்கூடிய மணித்தியால அளவில் 95% இற்கு மேற்பட்ட அளவு மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தியதாக அறிக்கையிடப்பட்டு மேலதிக நேர கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் அநேகமான உத்தியோகத்தர்கள் வருடம் முழுவதும் விடுமுறை பெற்றுக் கொள்ளாமல் 24 மணி நேரமும் சேவையிலிருந்ததன் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது சாத்தியமற்றதாகும்.

(ஈ) மேலதிக நேரக் கொடுப்பனவு, கொள்கலன் பரிசோதனைக் கட்டணம், ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் பிரயாணச் செலவினம் போன்ற கொடுப்பனவு செயற்பாட்டில் நிலவும் பலத்த உள்ளக நிர்வாக நலிவுகள் தொடர்பாக தொடர்ந்தும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனம் கோரப்பட்டிருந்ததுடன் அம்முறையற்ற செயற்பாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்ற மேற்குறித்த கொடுப்பனவுகள் சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களாக இருந்தன. இந்நிலைமையினை சீர் செய்வதற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் கொள்கலன் பரிசோதனைக் கட்டணம் தொடர்பாக காலங்கடந்த

பிரமாணங்கள் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சுங்க மேலதிக நேர மற்றும் கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டண நிதியத்தின் பேரில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேலதிக நேர நிதியத்திற்கு உரிய நிதி விளைவுகள் மாத்திரம் வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 171,182,085 ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 167,201,514 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,980,571 ஆன முன்னேற்றம் காணப்பட்டது. கொழும்பைச் சூழ அமைந்துள்ள சுங்க அலுவலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானங்களின் 14% அதிகரிப்பே இவ்வதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) மேலதிக நேர நிதியம்

சுங்க உத்தியோகத்தர்களின் வழமையான கடமைநேரத்திற்கு மேலதிக காலத்தின் போதும் கடமைக்காக சுங்கம் மூடப்பட்டிருக்கும் நாட்களில் கடமைகளை மேற்கொள்வதற்காக செலவிடப்படும் செலவினத்தை ஈடு செய்வதற்கு வெளியிலுள்ள பகிர்வு நிலையங்கள் மற்றும் ஏனைய நிறுவகங்களில் மேலதிக நேரமாக அறவிடப்படும் பணம் இந் நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் இதில் மேலதிக நேர சேவைகளுக்காக சுங்கப் பதவியணியினருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் இந் நிதியத்தின் செலவினமாக கருதப்படும்.

2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டு மற்றும் முன்னைய 07 ஆண்டுகளுக்கு உரிய மேலதிக நேர நிதியத்தின் நிதி விளைவுகள் தொடர்பான பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **வருமானம்** | **செலவினம்** | **மிகை** | **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் மிகையில் விருத்தி/ (குறைவு) சதவீதமாக** | **வருமானத்தின் சதவீதமாக மிகைகள்** |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| 2003 | 314.442 | 257.511 | 56.931 | - | 18.11 |
| 2004 | 336.786 | 302.717 | 34.069 | (40.15) | 10.12 |
| 2005 | 381.696 | 367.750 | 13.946 | (59.06) | 3.65 |
| 2006 | 490.012 | 384.789 | 105.223 | 654.52 | 21.47 |
| 2007 | 576.415 | 425.920 | 150.495 | 43.02 | 26.11 |
| 2008 | 576.671 | 424.275 | 152.396 | 1.26 | 26.43 |
| 2009 | 465.837 | 410.236 | 55.602 | (64) | 12.00 |
| 2010 | 583.491 | 416.289 | 167.202 | 200 | 28.64 |
| 2011 | 593.065 | 421.883 | 171.182 | 2.38 | 28.86 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது நிதியத்திலிருந்து பதவியணிக்காக ஏற்பட்டிருந்த செலவினம் ரூபா 362,297,078 ஆனதுடன் முன்னைய ஆண்டின் போது இது ரூபா 357,895,120 ஆகக் காணப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் சுங்கத் திணைக்களத்தின் மொத்த பதவியணியினர் 1,990 ஆக இருந்ததுடன் நிதியத்தின் வருடாந்த ஒரு ஊழியரின் வழமையான மேலதிக நேரக் கிரயம் ஏறத்தாழ ரூபா 182,059 ஆகக் காணப்பட்டது. ஒரு ஊழியரின் வழமையான மேலதிக நேரக் கிரயம் கணிப்பிடப்படுகையில் இலங்கை சுங்கத்தின் செலவினத் தலைப்பின் கீழ் திரட்டு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக நேரக் கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டிற்காக

திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் மேலதிக நேரக்கிரயம் ரூபா 1,893,780 ஆகும்.

(ii) இலங்கை சுங்க பதவியணியினருக்காக மீளாய்வாண்டின் போது மேலதிக நேர நிதியத்தினால் மேலதிக நேரச் செலவினம் செலவிடப்படுகையில் மேலதிக நிதியத்தின் மிகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியம்

சுங்க உத்தியோகத்தர்களினால் வழமையான கடமை நிலையங்களுக்கு வெளியே உள்ள சூழலில் பரிசோதனை கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்காக, பொருட்கள் தீர்வை செய்யும் தரப்பினர்களினால் அறவிடப்படும் பரிசோதனைக் கட்டணத்தில் 50% சுங்க மேலதிக நேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தொகை உத்தியோகத்தர்களுக்கு படிப்பணக் கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்படுகின்றது. மீளாய்வாண்டில் இவ்வாறு ரூபா 223,521,968 தொகை இந்நிதியத்திற்கு பெறப்பட்டிருந்ததுடன் முன்கொண்டுவரப்பட்ட மீதி உட்பட முழுத்தொகை ரூபா 593,167,825 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட செலவினம் ரூபா 341,098,003 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 369,645,857 தொகையான நிதியத்தின் வைப்பின் அளவு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 252,069,822 வரை குறைவடைந்திருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதியத்தின் பயன்படுத்தப்படாத பணத்தொகை திறைசேரி வைப்பாக ஒவ்வொரு ஆண்டின் போதும் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் இவ் வைப்புக்கணக்கின் மீதி மற்றும் நிதியத்தின் மீதி என்பன கீழே காண்பிக்கப்பட்டவாறு விருத்தியடைவதைக் காட்டுகின்றது. இம்மீதி தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | மேலதிக நேர நிதியம் | கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டண நிதியம் | திறைசேரி வைப்புக் கணக்கு மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2005 | 28,007,949 | -- | 28,007,949 |
| 2006 | 254,940,825 | 93,672,857 | 348,613,682 |
| 2007 | 451,423,786 | 157,259,952 | 608,683,738 |
| 2008 | 616,810,938 | 246,576,326 | 863,387,264 |
| 2009 | 669,350,013 | 322,004,787 | 991,354,800 |
| 2010 | 849,082,264 | 369,645,856 | 1,218,728,121 |
| 2011 | 1,022,822,795 | 252,069,822 | 1,274,892,617 |

## 4. கணக்களிப்பும் நல் ஆளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டின் பிரகாரமான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையே போதியளவு முரண்கள் கண்டறியப்பட்டமையால் பாதீடு அக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) பதவியணியினர்

(இ) நிலுவை வருமானம்

(ஈ) மேலதிக நேரவேலை மற்றும் பரிசோதனைக் கட்டணம்

(உ) கணக்கீடு